# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2374 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்

## பதவிகள் - வெற்றிடம்

**கவனிக்க.- 2024.02.22 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி பகுதி I: தொகுதி (IIஅ) - இல் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் கீழே பிரசுரிக்கப்படுகின்றன.**

### நீதிச்சேவை ஆணைக்குழு

அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளுதல் - 2024

1. 2088/26 ஆம் இலக்கமுடைய 2018.09.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரகையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அட்டவணைப் படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்து கொள்வதற்காக தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **சேவை நிபந்தனைகள்**

2.1 பகிரங்க சேவையின் நியமனத்தை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2088/ 26 ஆம் இலக்க மற்றும் 11.09.2018 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானிப் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக்குறிப்பிற்கு செய்யப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும் தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்படும் **"மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர்"** நியமிக்கப்படுவார்.

2.2 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2088/ 26 ஆம் இலக்க மற்றும் 11.09.2018 ஆம் திகதியுடைய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிரமாணக்குறிப்பில் அரச மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தலுக்கு அமைவாக பிரிவு 12.18 பிரகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள மற்றும் / அல்லது எதிர்காலத்தில் வெளியிடப்படவுள்ள சுற்றுநிருபங்களுக்கு அமைவாக மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்குரிய மற்றைய அரசகரும மொழி தொடர்பிலான தேர்ச்சியினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3. **சம்பளம்** : 03/2016 மற்றும் அதற்கு அமைவாக நீதிச்சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 24.06.2016 ஆந் திகதிய நீதிச்சேவை ஆணைக்குழுவின் 386 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவாக, அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்குரிய SL 1-2016 (மாதாந்தம்) ரூ. 47,615.00 - 10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 110,895.00 (இப்பதவிக்குரிய ஆரம்ப சம்பளம் SL 1-2016 இற்குரிய சம்பள அளவுக்குரிய 08 வது படிநிலையாகும். அதனடிப்படையில் ஆரம்ப சம்பளம் ரூபா 56,960.00) ஆகும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

4. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியது.

5. **தகைமைகள்:**

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

மற்றும்

(ஆ) 23.02.2024 ஆம் திகதிக்கு 30 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

மற்றும்

(இ) i. இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் I இல் ஐந்து வருடங்கள் உயிர்ப்பான, திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்ட பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட நீதிமன்ற பதிவாளராக இருத்தல் வேண்டும்.

அல்லது

ii. இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் I இல் இரண்டு வருடங்கள் உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை கொண்ட, பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட நீதிமன்ற பதிவாளராக இருத்தல் மற்றும் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் மேற்கொண்டிருத்தல் வேண்டும்.

அல்லது

iii. இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் II இன் I ஆம் வகுப்பில் மூன்று வருடங்கள் உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை கொண்ட, பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட நீதிமன்ற பதிவாளராக இருத்தல் மற்றும் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் மேற்கொண்டிருத்தல் வேண்டும்.

அல்லது

iv. இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் II இன் II ஆம் வகுப்பில் நான்கு வருடங்கள் உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை கொண்ட, பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட நீதிமன்ற பதிவாளராக இருத்தல் மற்றும் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் மேற்கொண்டிருத்தல் வேண்டும்.

அல்லது

v. இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் III இல் ஐந்து வருடங்கள் உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை கொண்ட, பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட நீதிமன்ற பதிவாளராக இருத்தல் மற்றும் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் மேற்கொண்டிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் சேவையில் அரச சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் அதற்கு சமமான சேவை ஒன்றில் 15 வருடங்கள் உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்ட சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியபிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(உ) ஐந்து வருடங்களுக்கு குறையாமல் செயல் திறமையுடையவாறு தொழிலில் ஈடுபட்டு வருகின்ற சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு :**

i. யாதேனும் அமைச்சொன்றில், அரச திணைக்களமொன்றில் அல்லது அரச கூட்டுதாபனமொன்றில் அல்லது அரச சட்ட வாரியமொன்றில் சட்டத்தரணியாக பதவிநிலை உத்தியோகம் ஒன்றில் அல்லது சட்டத்துறை சார் தகைமையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது சட்டக் கல்லூரியொன்றில் சட்டம் தொடர்பான ஆசிரியராக சேவையாற்றிய காலப்பகுதி செயல் திறமையுடையவாறு தொழிலில் ஈடுபட்டு வருகின்ற காலப்பகுதியாக கருதப்படும்.

ii. தற்போது பகிரங்க சேவையில், மாகாண அரசாங்க சேவையில் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

iii. அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் சேவை பிரமாணத்தின் 13.5 பிரகாரம் **"திருப்திகரமான சேவைக் காலம்"** என்பது அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்கள் வினைத்திறனுடனும் ஊக்கத்துடனும் பணியாற்றுவதன் மூலமும் சித்தி பெற வேண்டிய வினைத்திறமை காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெறுவதன் மூலமும்,

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2024, மார்ச் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மாச்சு மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

பதவியில் நிரந்தரமாக்கப்படுவதற்கு தேவையான தகைமைகளை பூர்த்தி செய்து கொள்வதன் மூலமும், அக்காலப்பகுதியில் ஈட்டிக்கொள்ள வேண்டிய சகல சம்பளவேற்றங்களையும் பெற்று, தண்டனைக்குரிய குற்றம் எதனையும் புரியாமல் சேவையாற்றும் காலப்பகுதியாகும்.

(ஊ) சிறந்த நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(எ) பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றப்போதுமான உடல் உள ரீதியிலான தகைமையினை பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**- சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் 23.02.2024 ஆந் திகதி அல்லது அதற்கு முதல் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6. அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பத்தாரிகளுக்கு நீதிச்சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கமைய நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக பதவிக்கு பொருத்தமான ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

7. மேலே 05 (இ), (ஈ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையினை பூர்த்தி செய்வதினூடாக பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படும் உத்தியோகத்தாரின் நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட வேலை பார்க்கும் காலத்திற்கு உட்படுவார். 05 (உ) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்வதினூடாக பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படும் உத்தியோகத்தர் நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவார்.

8. தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறும் அல்லது நியமனம் பெற்ற பதவியில் கடமைகளை பொறுப்பேற்பதனை மறுக்கும் அல்லது புறக்கணிக்கும் விண்ணப்பதாரிகளின் நியமனத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு அமைவாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உண்டு.

9. **பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை**

விண்ணப்பதாரி ஒருவர் முக்கியத்துவம் வாய்ந்தது என கருதப்படும் யாதேனுமொரு விடயம் தொடர்பான பிழையான கூற்றினை தெரிவித்துள்ளமை அல்லது உண்மையை மறைத்துள்ளமை தெரிவு செய்யப்பட முன்னர் தெரிய வருமாயின் தகைமையற்றவராக ஆக்கப்படலாம். தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமாயின் சேவையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது அவரது சேவை முடிவுறுத்தப்படலாம்.

10. **விண்ணப்பிக்கும் முறை**

(அ) விண்ணப்பப்படிவ கட்டணம் ரூ. 500.00 ஆகும். **"நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்"** பெயரில் மக்கள் வங்கி, டாம் வீதிக் கிளையில் பேணிச் செல்லப்படும் 297 100 199 025 039 கணக்கிற்கு எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பதாரியின் பெயர், முகவரி எழுதப்பட்ட 9 × 4 அளவுடைய கடித உறையுடன் பதிவுத்தபாலில் அனுப்புவதினூடாக அல்லது நேரடியாக வந்து ஒப்படைப்பதன் மூலம் விண்ணப்பபடிவத்தினை பெற்றுக்கொள்ள முடியும். பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டினை பூர்த்தி செய்யும் போது பற்றுச்சீட்டில் உரிய இடத்தில் விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஆ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவங்கள் 25.03.2024 திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு செயலகம், கொழும்பு 12 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்திற்கு விண்ணப்பதாரி நேரடியாக வந்து ஒப்படைக்க முடியும்.

11. (அ) விண்ணப்பபடிவத்தில் அபேட்சகரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையின் அதிபர் ஒருவரினால், சமாதான நீதவான் ஒருவரினால், சத்திய ஆணையாளரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படையின் அதிகாரமுடைய உத்தியோகத்தர் ஒருவரினால், பொலிஸ் சேவையில் செசப்படுத்தப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது பகிரங்க சேவைக்குரிய நிரந்தர பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) தற்போது பகிரங்க சேவையில் ஈடுப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தங்களது திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) எல்லா விதங்களிலும் முழுமையற்ற விண்ணப்பபடிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடப்பட்ட விண்ணப்பபடிவங்கள் தொலைந்து போதல் மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறல் என்பது தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

12. 01 தொடக்கம் 11 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தியாயம் / பிரிவுகளில் விளக்கமளிக்கப்படாத விடயங்கள் ஏதும் இருப்பின் அது தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கு அமைவாக நீதிச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் தீர்மானிப்பார்.

13. இவ் அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வடிவங்களுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு அமைவாக செயற்படுதல் வேண்டும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச்.எஸ்.சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தில்,
2024, பெப்புருவரி 19.

02-833

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**இலங்கை மதுவரித் திணைக்களம்**

மதுவரிக் காவலாளர் சாரதி பதவியில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2023

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரிக் காவலாளர் சாரதி பதவி பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்கு கீழே குறிப்பிடப்பட்ட இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02.கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு இணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2024.03.21 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "மதுவரி ஆணையாளர் நாயகம், இலங்கை மதுவரித் திணைக்களம், இல. 353, கோட்டை வீதி, ராஜகிரிய" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை வைத்தனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "மதுவரிக் காவலாளர் சாரதி பதவி" எனக் குறிப்பிடுதல் வேண்டும். முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பப்படிவங்களும் உரிய திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

03. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 29,540-7×300-27×370-ரூபா 41,630.00 உரித்துடையதாகும். ரூபா 29,540 மாதாந்த சம்பளப் படிநிலையில் வைக்கப்படும். (அ.நி.சு. 3/2016 இன்படி RS01-2016 (PC). மேற்படி சம்பள அளவுத்திட்டத்தின் ரூபா 30,440 சம்பளப் படிநிலையை விஞ்சுவதற்கு முன்னர் முதலாம் வினைத்திறன் காண் தடைப்பரீட்சையொன்று உண்டு.

04. **வயதெல்லை.**- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதியன்று 22 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க/மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் பொருட்டு உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று.)

05. பதவியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியன்று எல்லா முறையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. **கல்வித் தகைமை:**

கல்விப் பொதுத் தராதர(சாதாரண தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் 05 பாடங்களிற்குக் குறையாமல் சித்தியடைந்திருத்தல், இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு தமிழ் / சிங்களம் மற்றும் மற்றுமொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் கணிதம் அடங்கலாக ஆறு(06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

II. **தொழில்சார் தகைமை:-**

ய. நெடுஞ்சாலை சட்டவிதிகள் பற்றிய அறிவைக் கொண்டிருத்தல்

டி. மோட்டார் இயந்திர விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றிருத்தல்

உ. மோட்டார் பஸ் வண்டி, மோட்டார் கோச் "ஏ" வகுப்பு ஓட்டுவதற்காக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான சாரதி உரிமத்தைக் கொண்டிருத்தல்

III. **சேவை அனுபவம்:-**

செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொண்டதன் பிற்பாடு சாரதியாக, ஏற்றுக்கொண்ட நிறுவனம் ஒன்றில் 03 வருட சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்

IV. **உடல்சார் தகைமை**

(a) உயரம் குறைந்தபட்சம் 5 அடி 4அங்குலமாக இருத்தல்

(b) மார்பின் அளவு மூச்சு உள்வாங்காமல் 32அங்குலமும் இருத்தல் வேண்டும்

(c) மூக்குக் கண்ணாடி அல்லது தொடுகைக் கண்ணாடிவில்லை (கொன்டாக்ட் லென்ஸ்) இன்றி பொருட்களைப் பார்க்கும் ஆற்றல் ஆகக்குறைந்தது 6/6 மற்றும் 6/12 கண்பார்வையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(d) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்கான பணிகளை மேற்கொள்வதற்கும் போதுமான உடல், உள இயலுமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

V. **வேறு தகைமைகள்:-**

விண்ணப்பதாரர், இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டியதுடன் நல்லொழுக்கம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

06. **ஆட்சேர்ப்பு முறை :-**

(i) அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின் அல்லது பத்திரிகை அறிவித்தலின் அல்லது இணையத்தளப் பிரசுரத்தின் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சை மற்றும் தொழில்சார் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இவ்வெழுத்து பரீட்சை, சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் இடம்பெறுவதுடன் நெடுஞ்சாலை சட்டங்கள், மோட்டார் இயந்திரவியல் பற்றிய சாதாரண அறிவைப் பரீட்சிப்பதற்காக நடத்தப்படுகின்றன. விண்ணப்பித்த மொழிமூலத்தை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்படமாட்டாது.

(ii) அவ்வெழுத்துப் பரீட்சையில் அதியுயர் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களில் வெற்றிட எண்ணிக்கையின் இரு மடங்கினரை உடல்சார் தகைமைப் பரீட்சை மற்றும் வாகனம் செலுத்தும் பிரயோகப் பரீட்சைக்கு உட்படுத்தி அவர்கள் அவற்றில் பெற்ற புள்ளிகள் மற்றும் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் தர ஒழுங்கின் பிரகாரம் மதுவரிக் காவலாளர் சாரதிப் பதவிக்கு தெரிவு செய்யப்படுவர்.

(iii) **எழுத்துமூலப் பரீட்சை:**

| | பாடங்கள் | காலம் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தி பெறுதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1. | நெடுஞ்சாலை சட்டங்களும் மோட்டார் இயந்திர விஞ்ஞானமும் | 03 மணி | 100 | 40% |
| 2. | பொதுப் பரீட்சை | 01 மணி 30 நிமி. | 100 | 40% |

**பரீட்சைக்கான விடயப் பரப்பு:**

| | வினாத்தாளின் பெயர் | விடயப் பரப்பு |
|---|---|---|
| 1. | நெடுஞ்சாலை சட்டங்களும் மோட்டார் இயந்திர விஞ்ஞானமும் | நெடுஞ்சாலை சட்டங்கள் பற்றிய அறிவு, தொழில்நுட்ப விடயம் பற்றிய அறிவு, அத்துறை சார்ந்த அடிப்படைப் பிரச்சனை பற்றிய அறிவைப் பரிசீலிப்பதற்கான வினாத்தாளாகும். |
| 2. | பொதுப் பரீட்சை | விண்ணப்பதாரியின் பொது அறிவைப் பரிசீலிப்பதற்கான வினாத்தாளாகும். |

**நடாத்தும் அதிகார பீடம்:** நியமன அதிகாரி அல்லது நியமன அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

(iv) **தொழில்சார் பரீட்சை:** வாகனம் செலுத்தும் ஆற்றலை அளவிடும் பிரயோக பரீட்சையாகும்.

| | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தி பெறுதற்கான புள்ளிகள் |
|---|---|---|
| வாகனம் செலுத்தும் ஆற்றல் | 40 | 40% |

**நடத்தும் அதிகார பீடம்**: மோட்டார் வாகன திணைக்களத்தின் மோட்டார் வாகன பரிசோதகர், பொலிஸ் சேவை உத்தியோகத்தர் ஒருவர், திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரை உள்ளடக்கிய குழுவொன்றின் கண்காணிப்பின் கீழ் மதுவரி ஆணையாளர் நாயகத்தின் பணிப்புரையின் கீழ் இந்த தொழில்சார் பரீட்சை நடாத்தப்படும்.

(v) **உடல்சார் தகைமைப் பரீட்சை**: ஆட்சேர்ப்பு நடைமுறையின் 7.2.2.4 ஆம் பிரிவின் அடிப்படையில் உரிய தகமைகள் பரீட்சிக்கப்படும்.

(vi) **பொது நேர்முகப்பரீட்சை**

**அடைய வேண்டிய குறிக்கோள்கள்**: மதுவரிக் காவலாளர் சாரதிப் பதவிக்கு குறித்த நபர் சகல வழிகளிலும் பொருத்தமானவரா என்பதை பரீட்சிப்பதற்காக குறித்த நபர் தேவையான அடிப்படைத் தகுதிகளைக் கொண்டிருக்கிறாரா என்பதை சரிபார்ப்பதற்கு (சான்றிதழ் சரிபார்ப்பு)

**பொது நேர்முகப்பரீட்சை சபையின் நியமன அதிகாரி**: மதுவரி ஆணையாளர் நாயகம்

07. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :** இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். உங்களுக்குரிய ஓய்வூதிய முறை தொடர்பில் அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும் நீங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும். அரசினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் முறைமைக்கமைய நீங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும். இப்பதவி, மதுவரி திணைக்கள கட்டளைகளின் கீழ் கட்டுப்படுத்தப்படுகின்ற சீருடை (யுனிபோர்ம்) அணியும் பதவியொன்றாகும்.

08. ஒவ்வொரு நியமனம் தொடர்பிலும் அரச சேவை ஆணைக்குழுவின் 2310/29 ஆம் இலக்க, 2023.12.14 ஆம் திகதிய விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட நடைமுறை விதிகளில் காட்டப்பட்ட நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் என்பன ஏற்புடையனவாகும்.

09. இந்நியமனத்திற்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் கருத்திற் கொள்ளப்படாத விடயம் ஏதும் இருப்பின் அது பற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவால் விசாரிக்கப்பட்டு அதற்கான தீர்மானம் எடுக்கப்படும்.

10. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்களுக்கு அதுபற்றி எழுத்துமூலம் அறிவிக்கப்படும். இது தொடர்பில் பிரயாணச் செலவு போன்றன செலுத்தப்பட மாட்டாது.

எம். ஜே. குணசிறி,
மதுவரி ஆணையாளர் நாயகம்.

2024, பெப்புருவரி 22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரிக் காவலாளர் சாரதி பதவியில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் திறந்த போட்டிப் பரீட்சை- 2023**

01. (அ) முழுப்பெயர் (தாய் மொழியில்): ..........................................................................................................
..........................................................................................................

(ஆ) முழுப்பெயர் (ஆங்கிலத்தில கெப்பிட்டல் எழுத்தில்):- ..........................................................................
..........................................................................................................

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர்: ..........................................................................................................

02. தேசிய அடையாள அட்டை இலக்கம்:-

03. கையடக்கத் தொலைபேசி இல:-

04. தற்போதைய முகவரி : ..........................................................................................................
..........................................................................................................

(அ) நிரந்தர முகவரி : ..........................................................................................................
..........................................................................................................

(ஆ) பொலிஸ் நிலையம் : ..........................................................................................................

05. நீங்கள் இலங்கைப் பிரசையா என்பதுபற்றி (பரம்பரையாகவா, பதிவின் மூலமா என்பது பற்றி குறிப்பிடவும்) (பதிவின் மூலமாகவாயின் சான்றிதழின் பிரதியொன்றை இணைக்கவும்) .........................................................

06. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது பற்றி: .........................................................

07. பிறந்த திகதி :
ஆண்டு : ............. மாதம் : ............. திகதி : .............

08. வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது :-
வருடங்கள் : ............. மாதங்கள் : ............. நாட்கள் : .............
(பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றை இணைக்கவும்)

09. கல்வித் தகைமைகள் :

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

10. மார்பின் அளவு (மூச்சு உள்வாங்காமல்) .......... செ.மீ. ( .........அங்குலம்)

11. உயரம்:............................... செ.மீ. (..........அடி..........அங்குலம்)

12. எழுத்து, தொழில்சார் பரீட்சைக்கு தோற்றுவதற்கு நீங்கள் விண்ணப்பிக்கும் மொழிமூலம்:

சிங்களம் ☐ தமிழ் ☐

13. விண்ணப்பதாரரைப் பற்றி விசாரித்து அறியக்கூடிய இருவரின் பெயர்கள், பதவிகள் மற்றும் முகவரிகள் :-
(i) ..........................................................................................
..........................................................................................
(ii) ..........................................................................................
..........................................................................................

14. நீங்கள் இதற்கு முன் அரசாங்கத்தில் /மாகாண அரசாங்கத்தில் ஏதேனும் பதவியொன்றை வகித்திருப்பின்,

i. தற்போதைய பதவியும் சேவை நிலையமும் : ..........................................................................
ii. அந்தப்பதவியிலிருந்துவிலகியிருப்பின்அதற்கானகாரணத்தைகுறிப்பிடவும்:........................................

என்னால் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் வெளிப்படுத்தி உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் பொய்யானவை அல்லது தவறானவை என நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின், நட்டஈடு எதுவுமின்றி சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

.................................................
திகதி: ............................... விண்ணப்பதாரரின் கையொப்பம்.

02-828

---

**இலங்கை மதுவரித் திணைக்களம்**

மதுவரிப் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2023

மதுவரித் திணைக்களத்தில் முப்பத்தி நான்கு (34) மதுவரிப் பரிசோதகர் பதவிகளுக்கு பொது சேவையில் உள்ள பட்டதாரி விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள், இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் www.doenets.lk வெளியிடப் பட்டுள்ளதுடன் விண்ணப்பங்களை இணையமுறை (Online system)மூலம் மாத்திரமே சமர்ப்பிக்கமுடியும்.

நாடளாவிய ரீதியில் முக்கிய நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் பரீட்சை இடம்பெறும். (இந்த அறிவிப்பின் முடிவில் நகரம் மற்றும் நகர எண்கள் அடங்கிய ஆவணம், அட்டவணை இல. 01 ஆக இணைக்கப்பட்டுள்ளது.) பரீட்சையை எழுதுவதற்காக விண்ணப்பித்த நகரம் அல்லது நகரங்கள் அட்டவணை இல. 01 இன் படி அமைய வேண்டும். பின்னர் விண்ணப்பித்த நகரம் அல்லது நகரங்களை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. குறிப்பிட்ட நகரத்தில் பரீட்சை நிலையத்தை நிறுவுவதற்கு போதுமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்காதவிடத்து அந்த விண்ணப்பதாரர்கள் தங்களின் இரண்டாவது விருப்பமாக குறிப்பிடப்பட்ட நகரத்திலோ அல்லது அருகிலுள்ள வேறு நகரத்திலோ அமைக்கப்படும் பரீட்சை நிலையத்துக்கு அனுப்பப்படுவார்கள். மேலும் உத்தேசித்துள்ள நகரங்களில் அதிகமான அல்லது அனைத்து பரீட்சை நிலையங்களையும் நிறுவுவதற்கு போதுமான எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காதவிடத்து, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பரீட்சையினை கொழும்பில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்வார்.

01. **ஆட்சேர்ப்பு முறை**.- பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் எழுத்து பரீட்சை நடத்தப்பட்டு எழுத்துப் பரீட்சையில் சித்தி பெறுபவர்கள் தகுதியை மதிப்பிடுவதற்கான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்துப் பரீட்சை மற்றும் தகுதியை மதிப்பிடுவதற்கான நேர்முகப்பரீட்சை என்பவற்றில் பெற்ற மொத்த புள்ளிகளுக்கிணங்க பெற்றுக்கொண்ட நிலையின் அடிப்படையிலும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைவாகவும் ஆட்சேர்ப்பு நடைபெறும்.

**பதவியின் வேலை பற்றிய பொது விபரணம்**.- நஞ்சு, அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச் சட்டம், புகையிலை வரிச் சட்டம், அலுவலக நிர்வாகம் மற்றும் மேற்பார்வை தொடர்பான கடமைகளைச் செய்தல்.

02. இந்தப் பதவிக்குத் தகுதியானவர்களுக்கான சம்பளம் : ஒரு மாதச் சம்பளம் RS- 4 -2016 ரூ. 37,030 - 24 × 660 - ரூபா 52,870.00

03. **வயது எல்லை :** 2024.03.22 ஆம் திகதியன்று 21 வயதுக்கு குறையாமலும் 37 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். (மதுவரி திணைக்களத்தில் திணைக்கள சேவையிலுள்ளவர்களுக்கு வயதெல்லை கிடையாது.)

"அதற்கிணங்க 2003.03.22 அன்று அல்லது அதற்கு முன் பிறந்தவர்கள்அல்லது 1989.03.22 அன்று அல்லது அதற்கு பின் பிறந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்"

உ+ம்:-2024.03.22 ஆம் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் , 35 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும் என்றால் 2003.03.22 அன்று அல்லது அதற்கு முன் பிறந்த தினத்தை உடையவர்கள் மற்றும் 1989.03.22 அன்று அல்லது அதற்கு பின் பிறந்த தினத்தை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

04. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

i. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது UGC யினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திடம் இருந்து பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

ii. கல்விப் பொதுச் சாதாரண தரப் பரீட்சையில் (O/L) கணிதம் மற்றும் ஆங்கில மொழிக்கு குறைந்தபட்சம் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

4.1 **உடற் தகுதிகள்**

அனைத்து விண்ணப்பதாரர்களும்

i. குறைந்தபட்ச உயரம் (சப்பாத்து அணியாமல்) 5 அடி 06 அங்குலமாக இருக்க வேண்டும் மற்றும் மார்பு உள்ளிழுக்காமல் 33 அங்குலத்திற்கு குறைவாக இருக்கக்கூடாது.
ii. கண்ணாடிகள் அல்லது கான்டாக்ட் லென்ஸ்கள் இல்லாமல் குறைந்தது 6/6 மற்றும் 6/12 பார்வைக் கூர்மை இருக்க வேண்டும் .
iii. உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தீவின் எந்தப் பகுதியிலும் வேலை செய்யும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

4.2 **ஏனைய தகைமைகள்**

i. இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.
ii. ஒரு சிறந்த நன்னடத்தையை கொண்டிருக்க வேண்டும்.

*எழுத்துப் போட்டிப்பரீட்சை விவரங்கள் :*

| வினாத்தாள் | நேரம் | மொத்த மதிப்பெண் | தேர்ச்சி மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| 01. நுண்ணறிவு பரீட்சை | 02 மணி நேரம் | 100 | 40 % |
| 02. பொது வினாத்தாள் | 02 மணி நேரம் | 100 | 40 % |

*பரீட்சைக்கான பாடத்திட்டம்*

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டங்கள் |
|---|---|
| 01. நுண்ணறிவுப் பரீட்சை | இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரரின் நுண்ணறிவு, தர்க்கம் மற்றும் முடிவெடுக்கும் திறனை பரீட்சிக்கின்றது. ( கணிதம் தொடர்பான கேள்விகள் /படச் சிக்கல்கள், ஒத்தசொற்கள் /எதிர்ச்சொற்கள் எழுதுதல், சொற்றொடர்/வாக்கிய உருவாக்கம், வெற்றிடங்களை நிரப்புதல் போன்றவையும் இதில் உள்ளடங்கும்.) |
| 02. பொது வினாத்தாள் | இது இலங்கையிலும் உலகிலும் தற்போதைய பொதுவான தகவல்கள் மற்றும் சமூக நிகழ்வுகள் பற்றிய அறிவை பரீட்சிக்கின்றது. |

*தகுதி மதிப்பீட்டிற்கான நேர்முக பரீட்சை* - எழுத்துப் பரீட்சையில் சித்தி பெறும் விண்ணப்பதாரர்கள் தகுதி மதிப்பீட்டிற்கான நேர்முகப்பரீட்சைக்கு பரிந்துரைக்கப்படுவார்கள். எழுத்துப் பரீட்சை மற்றும் தகுதியை மதிப்பிடுவதற்கான நேர்முகப்பரீட்சை என்பவற்றில் பெற்ற மொத்த புள்ளிகளுக்கிணங்க பெற்றுக்கொண்ட நிலையின் அடிப்படையிலும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைவாகவும் பணியமர்த்தப்படுவார்கள். எவ்வாறாயினும், இலங்கை மதுவரித் திணைக்களம் வெற்றிடங்களை நிரப்ப வேண்டாம் என தீர்மானிக்கலாம் .

தகுதியை மதிப்பிடுவதற்கான நேர்முக பரீட்சையில் பின்வரும் தகுதிகளுக்கு மதிப்பெண்கள் வழங்கப்படும் :

| புள்ளிகள் வழங்கப்படும் முக்கிய தலைப்புகள் | அதிகூடிய சித்தி |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் பட்டபின் படிப்பு, பட்டப்பின் டிப்ளோமா, அடிப்படை தகைமைகளுக்கு மேலாக ஒரு பட்டம் பெற்றிருத்தல் மற்றும் முதல் பட்டப்படிப்பில் வகுப்புகளுடன் சித்திபெற்றிருத்தல். | 20 |
| 1. மொழிப்புலமை | 10 |
| 2. விளையாட்டுத் திறன்கள் பல்வேறு விளையாட்டுகளில் தேசிய, மாகாண, மாவட்ட, பிராந்திய மற்றும் பாடசாலை போட்டிகளில் சாதனை | 35 |
| ஏனைய திறமைகள் சிறப்புப் பயிற்சி கேடட்/தன்னார்வ, தற்காப்புப் பயிற்சி, தற்காப்புக் கலை அல்லது நுட்பப் பயிற்சி இணைப்பாடவிதான செயற்பாடுகள் | 30 |
| 3. நேர்முக பரீட்சை குழுவின் மதிப்பீடு | 05 |
| **மொத்தம்** | **100** |

05. **சேவை விதிமுறைகள்**

i. அரசாங்கம் அவ்வப்போது இயற்றும் அரசகரும மொழிகள் சட்டம் மற்றும் அனைத்துச் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கும் உட்பட்டது.

ii. 2022.12.14 ஆந் திகதிய வத்தமானியில் வெளியிடப்பட்ட நடைமுறை விதிகளின் குழு I இன் அத்தியாயம் III, அத்தியாயம் VII மற்றும் அத்தியாயம் VIII ஆகியவை பொருந்தும்.

iii. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு முன் விண்ணப்பதாரர்களின் உடற் தகுதி சோதிக்கப்படும்.

6 . **பயிற்சிக் காலம்**: தெரிவு செய்யப்படுபவர்களுக்கு 03 மாத பயிற்சி வழங்கப்படும். இந்த காலகட்டத்தின் முடிவில் இடம்பெறும் பரீட்சையில் சித்திபெறத் தவறுபவர்கள் அவர்களுடைய பயிற்சியை முடித்துக்கொள்வார்கள். பயிற்சி காலத்தில் பயிற்சி பெறுபவர்களுக்கு மாதாந்த உதவித்தொகையாக ரூபா 20,000 வழங்கப்படும்.

7. **தகுதிகூர் காலம்**: பயிற்சியை வெற்றிகரமாக முடித்த விண்ணப்பதாரர்கள் மூன்று (03) வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுத்தப்பட்டு, மதுவரி பரிசோதகர் பதவிக்கு நியமிக்கப்படுவார்கள். தகுதிகூர் காலத்தின் முடிவில், அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின்படி நடத்தப்படும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெற்றால், அவர்கள் அந்தந்த பதவியில் உறுதி செய்யப்படுவார்கள்.

7.1. இலங்கை மதுவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு, தனக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் ஏற்கத் தவறிய மற்றும் நியமிக்கப்பட்ட பதவியின் அல்லது நியமிக்கப்பட்ட பகுதியில் கடமைகளை ஏற்க மறுக்கும் அல்லது தவிர்க்கும் விண்ணப்பதாரர்களின் நியமனத்தை இரத்துச் செய்ய அதிகாரம் உள்ளது.

8. **பரீட்சைக் கட்டணம்**: நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பங்கள் ஆங்கிலத்தில் மட்டுமே பூர்த்தி செய்யப்பட வேண்டும். பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான பொதுவான அறிவுறுத்தல்களை பதிவிறக்கவும். விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யும் போது கண்டிப்பாக இந்த அறிவுறுத்தல்களை பின்பற்றவும்.

பரீட்சைக்கான கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் இணைய முறையில் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறையின் கீழ் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

I. ஏதேனும் வங்கிக் கடன் அட்டையின் ஊடாக (Any Bank Credit Cards)
II. ஏதேனும் வங்கிப் பற்று அட்டையின் ஊடாக (Any Bank Debit Cards)
III. இலங்கை வங்கியின் ஒன்லைன் பாங்கிங் முறைமை (Bank of Ceylon Online Banking Method)
IV. ஏதேனும் இலங்கை வங்கிக் கிளையின் ஊடாக (Bank of Ceylon Teller Slip Payment)
V. தபால் திணைக்களத்தின் தபால் அலுவலகம் ஒன்றின் ஊடாக (Post Department Payment at a Post office)

**குறிப்பு**: மேற்படி முறை ஊடாக பணம் செலுத்தும் வழிமுறை பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கொடுப்பனவு கிடைத்தமை பற்றி குறுஞ்செய்தி ஊடாக அறிவிக்கப்படும். பரீட்சைக்குரிய முழுத்தொகையும் செலுத்தப்பட வேண்டியதுடன், குறைவாகவோ அதிகமாகவோ பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிட்ட கொடுப்பனவு முறை ஊடாக பரீட்சைக் கட்டணம் செலுத்துகையில் ஏற்படும் வழுக்கள் தொடர்பில் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

09. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்ட தகைமைகளை உடையவர்களுக்கு மாத்திரம் விண்ணப்பத்தைக் கையேற்கும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூரணப்படுத்திய விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட உடனேயே இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் அறிவிப்பு வெளியிடப்படும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர்கள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனம்சார் பரீட்சைகள் அமைப்புப் பிரிவில் விசாரித்தறிதல் வேண்டும். அவ்விசாரணையில் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிடல் வேண்டும். கொழும்பிற்கு வெளியே விண்ணப்பதாரி இருப்பின் இவ்விபரங்களுடன் பக்ஸ் மூலமாக அனுமதி அட்டையின் பிரதியை அனுப்பும் பொருட்டு விண்ணப்பதாரியின் பக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிட்ட பக்ஸ் இலக்கத்தின் ஊடாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் இது பற்றிய விசாரணையை மேலும் இலகுவானதாக்கும். மேலும், பரீட்சைத் திணைக்களத்தால் கேட்கப்பட்ட ஏதேனும் தகவல்களை சான்றுப்படுத்துதற்கு விண்ணப்பதாரியிடமுள்ள விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டின் பிரதி, பதிவுத் தபாலில் அனுப்பியதற்கான பற்றுச்சீட்டு என்பவற்றை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டையை வழங்குதல், அவர் பரீட்சைக்கு அல்லது பதவிக்கு தகுதியானவரென ஏற்றுக்கொண்டதாகக் கருதப்பட முடியாது.

பரீட்சைக்குத் தோற்றும் முதலாம் தினத்தன்று பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதி அட்டையைக் கையளித்தல் வேண்டும்.

10. பரீட்சார்த்தி, பரீட்சை மண்டபத்தில் தோற்றும் சகல பாடங்களின் பொருட்டும் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை
II. செல்லுபடியான கடவுச்சீட்டு
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்கண்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை சமர்ப்பிக்கத் தவறிய விண்ணப்பதாரர்கள் பரீட்சையில் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை எண்பிக்கும் வகையில் முகம் மற்றும் காதுகளை மூடாது பரீட்சை மண்டபத்தில் நுழைதல் வேண்டும். ஆளடையாளத்தை நிரூபிக்காத விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த தருணத்திலிருந்து பரீட்சை முடிந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் பரீட்சார்த்தியை அடையாளங் காணும் வகையில் முகத்தையும் காதுகளையும் மூடாது இருத்தல் வேண்டும்.

11. விண்ணப்பப் படிவம் மற்றும் பரீட்சைக்கான அனுமதி அட்டை ஆகிய இரண்டிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் சான்றளிக்கப்பட வேண்டும். அனைத்து விண்ணப்பதாரர்களும் தங்கள் கையொப்பங்களை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் சான்றளிக்க வேண்டும்.

12. பரீட்சையை நடாத்துதல், பெறுபேற்றை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். இச்சட்ட ஒழுங்குவிதிகள் மீறப்படின், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

13. சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் ஏதேனும் மொழிப் பிழை அல்லது உடன்பாடின்மை காணப்படுமிடத்து சிங்கள மொழி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

எம். ஜே. குணசிறி
மதுவரி ஆணையாளர் நாயகம்.

இலங்கை மது வரி திணைக்களம்,
2024.02.22.

**அட்டவணை 01**

| | |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| யாழ்ப்பாணம் | 04 |
| மட்டக்களப்பு | 05 |
| குருநாகல் | 06 |
| அநுராதபுரம் | 07 |
| பதுளை | 08 |
| இரத்தினபுரி | 09 |

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கை மதுவரித் திணைக்களம்**

மதுவரிப் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023

மொழிமூலம் (கூட்டில் தொடர்புடைய இலக்கத்தை எழுதவும்)

| நகரம் | நகர எண் |
|---|---|
| | |
| | |

1.1 பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(அட்டவணை 01 ஐப் பார்க்கவும்)

1. (i) முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ..........................................
(ii) முழுப் பெயர் (தொகுதியில் எழுத்துக்கள் ) : ..........................................
(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................
(கெப்பிட்டல் எழுத்துக்களில்)

2. (i) நிரந்தர முகவரி (கெப்பிட்டல் எழுத்துக்களில் ) : ..........................................
(ii) பிரதேச செயலாளர் பிரிவு : ..........................................
(iii) கிராம நிஅலுவலர் பிரிவு : ..........................................
(iv) அண்மையிலுள்ள காவல் நிலையம்: ..........................................
(v) அண்மையிலுள்ள கலால் நிலையம் : ..........................................
(vi) தபால் முகவரி : ..........................................
(பரீட்சை அனுமதி அட்டைகளை அனுப்புவதற்கு)

3. ஆண் /பெண் பிரிவு
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4. தேசிய ஆளடையாள அட்டை இல. :

5. கையடக்கத் தொலைபேசி இல. :

6. பிறந்த திகதி : -
2024.03.22 ஆந் திகதியன்று வயது : வருடங்கள் : .......... மாதங்கள் : .............. நாட்கள் : ...........

7. நீங்கள் இலங்கைப் பிரஜையா?
(பரம்பரையாகவா, பதிவின் மூலமாகவா எனக் குறிப்பிடவும்)

8. தேசியம் : ...............................

9. திருமணமானவரா /திருமணமாகாதவரா: ..............................................

10. கல்வித்தகமை

| பட்டத்தின் பெயர் மற்றும் பட்டம் பெற்ற ஆண்டு | பல்கலைக்கழகம் | ஆண்டு | சித்தியடைந்த வகுப்பு |
|---|---|---|---|
| | | | |

(ii) க.பொ.த (சா.த.) இல் பெற்றுக்கொண்ட சித்திகள்

| | |
|---|---|
| வருடம் : ......... | பரீட்சை இல. :............................ |

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(ii) கா.பொ.த. (உயர் தரத்தில்) பெற்றுக்கொண்ட சித்திகள்

| வருடம் : .......... பரீட்சை | இல. :............................ |
|---|---|
| பாடம் | சித்தி |
| | |
| | |
| | |
| | |

11. தற்போதைய வேலை பற்றிய விவரங்கள்..............................................................................................................
...............................................................................................................

12. விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் பற்றிய விவரங்கள் :
...............................................................................................................

13. விசேட பயிற்சிகள் தொடர்பான விவரங்கள் :
...............................................................................................................
...............................................................................................................

14. (I) உயரம் : செ.மீ. ................ (அடி : .............. அங்குலம் : ......... )
(II) மார்பின் அளவு ( உள்ளிழுக்காமல்) செ.மீ. ..........
(அங்குலங்கள் .........)

15. குற்றவியல் தவறொன்றுக்கு நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின், அந்த தவறும், பெற்ற தண்டனை பற்றிய விபரங்கள் :...............................................................................................

16. விண்ணப்பதாரியின் உறுதியுரை:
என்னால் இங்கு குறிப்பிட்ட தகவல்கள் சரியானவையென சான்றுப்படுத்துகிறேன். இங்கு குறிப்பிட்ட ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது தவறானது என தெரிவு செய்ய முன்னர் வெளிப்படுத்தப்படின், நான் தகுதியற்றவராக ஆக்கப்படுதற்கும் நியமனத்தின் பின்னர் வெளிப்படுத்தப்படின் சேவை நீக்கம் செய்யப்படலாம் என்பதையும் நான் அறிவேன். மேலும் பரீட்சையை நடாத்துதல், பெறுபேற்றை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கு நான் கட்டுப்படுவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டது எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

திகதி : ....................................

..............................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

02-776/1

---

## இலங்கை மதுவரித் திணைக்களம்

*மதுவரிக் காவலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023*

இலங்கை மதுவரி திணைக்களத்தில் ஆண் /பெண் மதுவரி காவலாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக, தற்போது அரசாங்க சேவையின் முதன்மை சேவை பிரிவில் பதவிகளை வகிக்கும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் www.doenets.lk வெளியிடப் பட்டுள்ளதுடன் விண்ணப்பங்களை இணையமுறை (Online system) மூலம் மாத்திரமே சமர்ப்பிக்கமுடியும். பரீட்சை விண்ணப்பத்தின் பிரதி விண்ணப்பதாரரால் அவரது தனிப்பட்ட கோவையில் உட்சேர்ப்பதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கவேண்டும். மேலும் நிறுவனத்தின் தலைவரால் சான்றளிக்கப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி மற்றும் சேவையை நிரூபிப்பதற்கான கடிதம் ஆகியவை நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்

நாடளாவிய ரீதியில் முக்கிய நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் பரீட்சை இடம்பெறும். (இந்த அறிவிப்பின் முடிவில் நகரம் மற்றும் நகர எண்கள் அடங்கிய ஆவணம், அட்டவணை இல. 01 ஆக இணைக்கப்பட்டுள்ளது.) பரீட்சையை எழுதுவதற்காக விண்ணப்பித்த நகரம் அல்லது நகரங்கள் அட்டவணை இல. 01 இன் படி அமைய வேண்டும். பின்னர் விண்ணப்பித்த நகரம் அல்லது நகரங்களை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. குறிப்பிட்ட நகரத்தில் பரீட்சை நிலையத்தை நிறுவுவதற்கு போதுமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்காதவிடத்து அந்த விண்ணப்பதாரர்கள் தங்களின் இரண்டாவது விருப்பமாக குறிப்பிடப்பட்ட நகரத்திலோ அல்லது அருகிலுள்ள வேறு நகரத்திலோ அமைக்கப்படும் பரீட்சை நிலையத்துக்கு அனுப்பப்படுவார்கள். மேலும் உத்தேசித்துள்ள நகரங்களில் அதிகமான அல்லது அனைத்து பரீட்சை நிலையங்களையும் நிறுவுவதற்கு போதுமான எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காதவிடத்து, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பரீட்சையினை கொழும்பில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்வார்.

01. **ஆட்சேர்ப்புமுறை**: ஆண்/பெண் மதுவரிக் காவலாளர் பதவிவெற்றிடங்களின் எண்ணிக்கை - 100 இதில் 10% பெண் விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கப்படும்.

தகுதியான விண்ணப்பதாரர்கள் போட்டிப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள். அத்துடன் நேர்முகப்பரீட்சையில் சித்தி அடைபவர்கள் புள்ளிகள் வழங்கி பணியமர்த்தப்படுவார்கள்.

மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் நிரப்பப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கையை அதன் கீழ் நிரப்ப முடியாவிட்டால், அந்த பணியிடங்களும் திறந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மூலம் நிரப்பப்படும்.

எழுத்து பரீட்சை மற்றும் தகுதியை மதிப்பிடுவதற்கான நேர்முகப்பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைபெறும். முதலில் எழுத்துப் பரீட்சை நடத்தப்பட்டு, எழுத்துப் பரீட்சையில் சித்தி பெறுபவர்களின் எண்ணிக்கையை விட மூன்று மடங்கானோர் தகுதியை மதிப்பிடுவதற்கான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்துப் பரீட்சை மற்றும் தகுதியை மதிப்பிடுவதற்கான நேர்முகப்பரீட்சை என்பவற்றில் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைபெறும். அவர்களுக்கு எதிராக குற்றப் பதிவுகள் அல்லது பிற குற்றங்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்திய பின்னர், தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் ஆறு (06) மாத பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். அதில் 03 மாதங்கள் பயிற்சிப் பாடசாலையில் இருப்பார்கள். மீதமுள்ள மூன்று (03) மாதங்கள் களப்பணியாற்றுவார்கள். பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்திசெய்பவர்கள் மதுவரி காவலாளர் பதவிக்கு பணியமர்த்தப்படுவார்கள்.

02. **பதவியின் பொது கடமைகள் பற்றிய விபரம்** :

நியமிக்கப்பட்ட பகுதிகளில் களப்பணிகளை மேற்கொள்ளும் போது நஞ்சு அபின் மற்றும் ஆபத்தான அவுடதங்கள் மற்றும் கட்டளைசட்டம், 1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுபானங்கள் மீதான தேசிய அதிகார சபை சட்டம், என்பவற்றின் கீழ் மதுவரி குற்றங்கள் தொடர்பான தகவல்களை கண்டறிந்து அறிக்கையிடுதல், அத்தகைய சோதனைகளுக்கு ஆதரவு அளித்து, தொடர்புடைய நீதிமன்ற நடவடிக்கைகளில் உதவுதல், மதுவரித் திணைக்களத்தின் கீழ் வரும் மதுவரி கட்டளைச் சட்டம் மற்றும் பிற சட்டங்களின் கீழ் அலுவலக துணைபணிகள் உள்ளடங்கலாக மதுவரி குற்றங்கள்/தொழில் சார்ந்த அறிக்கைகள் மற்றும் ஆவணங்களை புதுப்பித்து சமர்ப்பிக்கும் பணியில் உதவுதல், தொழிற்சாலைகள், வடிசாலைகள், களஞ்சியசாலைகளில் பணிகளை ஆற்றுதல். கள்ளு சேகரிப்பு மையங்களின் ஆய்வு மற்றும் பரிசோதனை.

03. **சம்பள அளவு** : மாதாந்த சம்பளம் RS-1-2016 ரூபா 29,540-7 × 300 - 27 × 370 - ரூபா 41,630.00 இந்த பதவிக்கு உரித்துடையதாகும். ( அ.நி.சு. 03/2016 இன் படி )

04. **வயது எல்லை**: விண்ணப்பதாரர்களின் வயது விண்ணப்பம்கோரப்பட்ட திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும் .

அதற்கிணங்க 2006.03.22 அல்லது அதற்கு முன் பிறந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.

எ.கா:- 2024.03.22 ஆம் திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும் என்றால், 2006.03.22 அன்று அல்லது அதற்கு முன் மற்றும் 1989.03.22 அன்று அல்லது அதற்குப் பின்னர் பிறந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

05. **கல்வி மற்றும் ஏனைய தகமைகள்**:

i. கா.பொ.த. சாதாரணதர பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் ஆகியவற்றுடன் ஆங்கில மொழி உட்பட 6 பாடங்களில் திறமைச்சித்தியை ஒரே அமர்வில் பெற்றிருத்தல்.
ii. ஆண் விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்ச உயரம் (சப்பாத்து அணியாமல்) 5 அடி 06 அங்குலமாக இருக்க வேண்டும். உள்ளிழுக்காமல் மார்பு சுற்றளவு 33 அங்குலம். பெண் விண்ணப்பதாரர்களின் உயரம் 5 அடி 2 அங்குலம் இருக்க வேண்டும்.
iii. மூக்குக் கண்ணாடி அல்லது தொடுகைக் கண்ணாடியில்லை (கொன்டாக்ட் லென்ஸ்) இன்றி பொருட்களைப் பார்க்கும் ஆற்றல் ஆகக்குறைந்தது 6/6 மற்றும் 6/12 கண்பார்வையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iv. விண்ணப்பதாரர்கள் நன்னடத்தை கொண்டவர்களாக இருக்க வேண்டும்.
v. தீவின் எப்பகுதியிலும் பணிபுரிய போதுமான உடல் மற்றும் உள தகுதியை பெற்றிருத்தல் வேண்டும்.
vi. விளையாட்டு திறன்கள் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
vii. அனைத்து விண்ணப்பதாரர்களும் திருமணமாகாதவர்களாக இருக்க வேண்டும்.
விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்குள் மேற்கண்ட தகுதிகள் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

06. **எழுத்துப் போட்டிப் பரீட்சை விவரங்கள்** : பரீட்சை சிங்கள மொழி மற்றும் தமிழ் மொழி மூலம் மட்டுமே நடைபெறும். மொழி மூலத்தை மாற்ற பின்னர் அனுமதிக்கப்படமாட்டாது.

| வினாத்தாள் | காலம் | மொத்த புள்ளிகள் | சித்தி |
|---|---|---|---|
| நுண்ணறிவு பரீட்சை | 1 மணி நேரம் | 100 | 40% |
| பொது அறிவு | 1 மணி நேரம் | 100 | 40% |

பரீட்சைக்கான பாடத்திட்டம்

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டங்கள் |
|---|---|
| 1. நுண்ணறிவு பரீட்சை | இவ்வினாத்தாளானது வார்த்தைகள், இலக்கங்கள் மற்றும் வரைகலை காட்சிகள் போன்றவற்றின் மூலம் வழங்கப்பட்ட பிரசினங்களுக்கு விண்ணப்பதாரர்களால் வழங்கப்படும் அனுமானங்கள் மற்றும் பதில்களை ஆய்வு செய்வதன் மூலம் விண்ணப்பதாரரின் புரிதல் திறன், நுண்ணறிவு, தர்க்கரீதியான, பகுப்பாய்வு மற்றும் முடிவெடுக்கும் திறன் ஆகியவற்றை பரீட்சிக்கின்றது. |
| 2. பொது அறிவு | இது இலங்கையிலும் உலகிலும் தற்போதைய பொதுவான தகவல்கள் மற்றும் சமூக நிகழ்வுகள் பற்றிய அறிவை பரீட்சிக்கின்றது. |

07. திறன் மதிப்பீட்டு நேர்முக பரீட்சை தகுதிக்கான அளவுகோல்கள் மற்றும் புள்ளிகள் கீழே உள்ளன.

i. மேலதிக கல்வித் தகுதி :- 20 புள்ளிகள் (முதுகலை /பட்டதாரி -10 புள்ளிகள் /டிப்ளோமா - 07 புள்ளிகள் /சான்றிதழ் கற்கை -03 புள்ளிகள்)
ii. விளையாட்டு திறன்கள் :- (09 புள்ளிகள்)
iii. சாரணர்/மாணவர் :- (09 புள்ளிகள்)
iv. தற்காப்பு பயிற்சி: - (09 புள்ளிகள்)
v. சமூக சேவைகள் தொடர்பான பதவிகள் : - (09 புள்ளிகள்)
vi. சாரதி அனுமதி பத்திரம் வைத்திருப்பது : - (09 புள்ளிகள்)
vii. கணினியறிவு :- (15 புள்ளிகள்)
viii. மொழித்திறன் :- (15 புள்ளிகள்)
ix. நேர்முகப்பரீட்சையில் காட்டப்படும் திறமை :- (05 புள்ளிகள்)

08. **பரீட்சைக் கட்டணம்**: நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பங்கள் ஆங்கிலத்தில் மட்டுமே பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரரால் நிகழ்நிலையில் அனுப்பப்பட்ட மென்பிரதி மற்றும் பதிவு செய்யப்பட்ட தபாலில் அனுப்பப்பட்ட அச்சுப்பரதி சரிபார்க்கப்பட்டு விண்ணப்பமானது திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது/ ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை ஒரு குறுஞ்செய்தி (SMS) மூலம் கணினியை அணுகுவதற்குப் பயன்படுத்தப்படும் கையடக்கத் தொலைபேசி எண்ணிற்கோ அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கோ அறிவிக்கப்படும். ஒன்லைன் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான பொதுவான அறிவுறுத்தல்களை பதிவிறக்கவும். விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது கண்டிப்பாக இந்த அறிவுறுத்தல்களை பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சுப்பிரதி பெற்ற பிறகு, அதில் செய்யப்படும் எந்தத் திருத்தமும் சரியான திருத்தமாக கருதப்படாது. முழுமையடையாத விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

பரீட்சைக் கட்டணம் ரூ. 600.00 ஆகும். பரீட்சைக்கான கட்டணம் செலுத்தும் போது, இணைய முறையில் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகளில் மாத்திரம் செலுத்தப்பட வேண்டும்.

I. வங்கி கடன் அட்டைகள் ஊடாக (Any Bank Credit Cards)
II. வங்கிப் பற்று அட்டையின் ஊடாக (Any Bank Debit Cards)
III. இலங்கை வங்கி ஒன்லைன் வங்கி முறை (Bank of Ceylon Online Banking Method)
IV. ஏதேனும் இலங்கை வங்கிக் கிளையின் ஊடாக (Bank of Ceylon Teller Slip Payment)

**குறிப்பு**:- மேற்படி முறை ஊடாக பணம் செலுத்தும் வழிமுறை பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கொடுப்பனவு கிடைத்தமை பற்றி குறுஞ்செய்தி ஊடாக அறிவிக்கப்படும். பரீட்சைக்குரிய முழுத்தொகையும் செலுத்தப்பட வேண்டியதுடன், குறைவாகவோ அதிகமாகவோ பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிட்ட கொடுப்பனவு முறை ஊடாக பரீட்சைக் கட்டணம் செலுத்துகையில் ஏற்படும் வழுக்கள் தொடர்பில் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

பரீட்சைக்கு செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பி அளிக்கப்படமாட்டாது அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படாது.

09. **பயிற்சி காலம்**: தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களும் முதலில் ஆண் /பெண் மதுவரி காவலாளர் பயிற்றப்படுபவர்கள் ஆக நியமிக்கப்படுவார்கள். அத்துடன் ஆண் /பெண் மதுவரி காவலாளர் பதவிக்கு நியமனம் செய்வதற்கு குறைந்தபட்சம் 06 மாதங்கள் பயிற்சி பெற்று பின்னர் பரிந்துரைக்கப்பட்ட பரீட்சைகளில் சித்தி பெற வேண்டும் . அதில் மூன்று (03) மாதங்கள் பயிற்சிப் பள்ளியிலும், மீதமுள்ள மூன்று (03) மாதங்கள் களப் பயிற்சியாகவும் இருக்கும். பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்கள் மதுவரி காவலாளர் பதவிக்கு பணியமர்த்தப்படுவார்கள்.

மதுவரி காவலாளர் பயிற்சிக்கான முதன்மை நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து குறைந்தது ஆறு (06) மாதங்களுக்கு ஒரு பயிற்சிக் கொடுப்பனவு வழங்கப்படும்.(பயிற்சி உதவித்தொகை ஆட்சேர்ப்பின் போது தீர்மானிக்கப்படும்.)

10. **தகுதிகூர் காலம்**: பயிற்சியை வெற்றிகரமாக முடித்த விண்ணப்பதாரர்கள் மூன்று (03) மாத தகுதிகூர் காலத்திற்கு உட்படுத்தப்பட்ட ஆண்/ பெண் மதுவரி காவலாளர் பதவிக்கு நியமிக்கப்படுவார்கள். தகுதிகூர் காலத்தின் முடிவில், அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின்படி நடத்தப்படும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெற்றால், அவர்கள் அந்தந்த பதவியில் உறுதி செய்யப்படுவார்கள்.

11. **வேலைக்கான நிபந்தனைகள்**:

i. இந்த நிலை நிரந்தரமானதும் ஓய்வூதியம் பெறக்கூடியதுமாகும்.
ii. தீவின் எந்தப் பகுதியிலும் வேலை செய்ய நியமிக்கப்படலாம்.

12. **சேவை விதிமுறைகள்:**

i. அரசு அவ்வப்போது இயற்றும் அரசகரும மொழிச் சட்டம் மற்றும் அனைத்துச் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளிக்கும் உட்பட்டது.

ii. 14.12.2022 ஆம் திகதிய வத்தமானியில் வெளியிடப்பட்ட நடைமுறை விதிகளின் குழு I இன் அத்தியாயம் III, அத்தியாயம் VII மற்றும் அத்தியாயம் VIII ஆகியவை பொருந்தும்.

iii. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு முன் விண்ணப்பதாரர்களின் உடற் தகுதிக்காக சோதிக்கப்படும்.

13. இலங்கை மதுவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு, தனக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் ஏற்கத் தவறிய மற்றும் நியமிக்கப்பட்ட பதவியின் அல்லது நியமிக்கப்பட்ட பகுதியில் கடமைகளை ஏற்க மறுக்கும் அல்லது தவிர்க்கும் விண்ணப்பதாரர்களின் நியமனத்தை இரத்து செய்ய அதிகாரம் உள்ளது.

14. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்ட தகைமைகளை உடையவர்களிற்கு மாத்திரம் விண்ணப்பத்தைக் கையேற்கும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூரணப்படுத்திய விண்ணப்பதாரர்களிற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட உடனேயே இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் அறிவிப்பு வெளியிடப்படும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர்கள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனம்சார் பரீட்சைகள் அமைப்புப் பிரிவில் விசாரித்தறிதல் வேண்டும். அவ்விசாரணையில் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிடல் வேண்டும். கொழும்பிற்கு வெளியே விண்ணப்பதாரி இருப்பின் இவ்விபரங்களுடன் பக்ஸ் மூலமாக அனுமதி அட்டையின் பிரதியை அனுப்பும் பொருட்டு விண்ணப்பதாரியின் பக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிட்ட பெக்ஸ் இலக்கத்தின் ஊடாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் இது பற்றிய விசாரணையை மேலும் இலகுவானதாக்கும். மேலும், பரீட்சைத் திணைக்களத்தால் கேட்கப்பட்ட ஏதேனும் தகவல்களை சான்றுப்படுத்துவதற்கு விண்ணப்பதாரியிடமுள்ள விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டின் பிரதி, பதிவுத் தபாலில் அனுப்பியதற்கான பற்றுச்சீட்டை என்பவற்றை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

விண்ணப்பதாரரிற்கு அனுமதி அட்டையை வழங்குதல், அவர் பரீட்சைக்கு அல்லது பதவிக்கு தகுதியானவரென ஏற்றுக்கொண்டதாகக் கருதப்பட முடியாது.

பரீட்சைக்குத் தோற்றும் முதலாம் தினத்தன்று பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதி அட்டையைக் கையளித்தல் வேண்டும்.

15. பரீட்சார்த்தி, பரீட்சை மண்டபத்தில் தோற்றும் சகல பாடங்களின் பொருட்டும் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டு
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

மேலும் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை எண்பிக்கும் வகையில் முகம் மற்றும் காதுகளை மூடாது பரீட்சை மண்டபத்தில் நுழைதல் வேண்டும். ஆளடையாளத்தை நிரூபிக்காத விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த தருணத்திலிருந்து பரீட்சை முடிந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் பரீட்சார்த்தியை அடையாளங் காணும் வகையில் முகத்தையும் காதுகளையும் மூடாது இருத்தல் வேண்டும்

16. விண்ணப்பப் படிவம் மற்றும் பரீட்சைக்கான அனுமதி அட்டை ஆகிய இரண்டிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் சான்றளிக்கப்பட வேண்டும். அனைத்து விண்ணப்பதாரர்களும் தங்கள் கையொப்பங்களை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் சான்றளிக்க வேண்டும்.

17. பரீட்சையை நடத்துதல், பெறுபேற்றை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குவிதிகளிற்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். இச்சட்ட ஒழுங்குவிதிகள் மீறப்படின், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

18. சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் ஏதேனும் மொழிப் பிழை அல்லது உடன்பாடின்மை காணப்படுமிடத்து சிங்கள மொழி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

எம். ஜே. குணசிறி
மதுவரி ஆணையாளர் நாயகம்.
இலங்கை மது வரித் திணைக்களம்.

விண்ணப்பத்தில் முதல் பக்கத்தில் 1 முதல் 6 வரையிலான தலைப்புகளையும், ஏனைய பக்கங்களில் பொருத்தமான வற்றையும் சேர்க்கவும்.

***அட்டவணை 01***

| | |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| யாழ்ப்பாணம் | 04 |
| மட்டக்களப்பு | 05 |
| குருநாகல் | 06 |
| அனுராதபுரம் | 07 |
| பதுளை | 08 |
| இரத்தினபுரி | 09 |

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கை மதுவரித் திணைக்களம்**

மதுவரிக் காவலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023

1. மொழிமூலம்

1.1 பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்

சிங்களம் - 2
தமிழ் - 3 ☐

(கூட்டில் தொடர்புடைய இலக்கத்தை எழுதவும்)

1.2 பரீட்சைக்குத் தோற்றும் நகரம்

| நகரம் | நகர எண் |
|---|---|
| | |
| | |

(அட்டவணை 1ஐப் பார்க்கவும்)

2. (i) முழுப் பெயர் (சிங்களத்தில் /தமிழில்): ..............................................................
(ii) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்): ..........................................................
(iii) முதலெழுத்துக்களுடன் பெயர்: .........................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

3. (i) நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் ........................................................
(ii) பிரதேச செயலகப் பிரிவு : ........................
(iii) கிராம அலுவலர் பிரிவு : .........................
(iv) அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் : ................................
(v) அண்மையிலுள்ள மதுவரி நிலையம் : ......................
(vi) தபால் முகவரி : ...........................
(பரீட்சை அனுமதி அட்டைகளை அனுப்புவதற்கு)

4. பெண்/ஆண்:-
ஆண் - 0 ☐
பெண் - 1
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

5. தேசிய ஆளடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

6. கையடக்கத் தொலைபேசி இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

7. பிறந்த திகதி :
2024.03.22 ஆந் திகதியன்று வயது: வருடம் : .......... மாதம்: .............. நாள்: .............

8. நீங்கள் இலங்கை பிரசையா ?
(பரம்பரையாகவா, பதிவின் மூலமாகவா எனக் குறிப்பிடவும்.

9. தேசியம் : ...............................

10. திருமணமானவர் /திருமணமாகாதவர் :
திருமணமானவர் - 01 ☐
திருமணமாகாதவர் - 02

11. கல்வித்தகமை
(i) கா.பொ.த (சா.த) இல் பெற்றுக்கொண்ட சித்தி

| வருடம் : ......... | பரீட்சை இல. :........................... |
|---|---|
| பாடம் | சித்தி |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(ii) கா.பொ.த. (உயர் தரத்தில்) பெற்றுக்கொண்ட சித்தி

| வருடம் : ......... | பரீட்சை இல. :............................ |
|---|---|
| பாடம் | சித்தி |
| | |
| | |
| | |
| | |

(iii)ஏனைய கல்வித்தகைமை: ............

12. பாடசாலைக் கல்வியின் பின்னர் மேற்கொண்ட தொழில் /கற்கைநெறி

| தொழில் அல்லது கற்கைநெறியின் பெயர் | காலம் (தொடக்கம் - வரை) | நிறுவனம் | தொழிலாயின், வெளியேறுவதற்கான காரணங்கள் |
|---|---|---|---|
| | | | |

13. விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் பற்றிய விவரங்கள் : ..........................................................
..........................................................................................................................................

14. விசேட பயிற்சிகள் /தன்னார்வ இராணுவ சேவை பயிற்சிகள் ஏதும் இருப்பின் அது பற்றிய விபரங்கள் .................
..........................................................................................................................................

15. (i) உயரம் : செ.மீ. : ............... ( அடி : .............. அங்குலம் : ......... )
(ii) மார்பின் அளவு (உள்ளிழுக்காமல்) செ.மீ. .......... (அங்குலம் .........)

16. குற்றவியல் தவறொன்றுக்கு நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின், அந்த தவறும், பெற்ற தண்டனையும் பற்றிய விபரங்கள் : ..........................................................................................................

17. விண்ணப்பதாரியின் உறுதியுரை
என்னால் இங்கு குறிப்பிட்ட தகவல்கள் சரியானவையென சான்றுப்படுத்துகிறேன். இங்கு குறிப்பிட்ட ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது தவறானது என, தெரிவு செய்ய முன்னர் வெளிப்படுத்தப்படின், நான் தகுதியற்றவர் ஆக்கப்படுதற்கும் நியமனத்தின் பின்னர் வெளிப்படுத்தப்படின் சேவை நீக்கம் செய்யப்படலாம் என்பதையும் நான் அறிவேன். மேலும் பரீட்சையை நடத்துதல், பெறுபேற்றை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குவிதிகளிற்கு நான் கட்டுப்படுவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டது எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

திகதி :....................................

.............................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

02-776/2

---

**கவனிக்க.- 2024.03.01 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி பகுதி I: தொகுதி (IIஅ) - இல் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் கீழே பிரசுரிக்கப்படுகின்றன.**

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**

(மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு)

(01) **நிருவாக உத்தியோகத்தர் - 01 பதவி**

01. **வயதெல்லை** : விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியன்று 22 வயதிற்கும் குறையாத 45 வயதிற்கு கூடாதிருத்தல். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை உட்படாது.)

02. **கல்வி தகைமை: வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனிதவள முகாமைத்துவம் /வணிகம் /அரச நிருவாகம்/அரச முகாமைத்துவம் /முகாமைத்துவ பட்டம் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்** (கீழே 1 அல்லது 2)

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமையை பெற்றிருத்தல்.
2. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA I) சேவைப்பிரிவில் II ஆம் தரத்திற்கு உற்பட்ட பதவி ஒன்றில் குறைந்த பட்சம் 5 வருடங்கள் திருப்திகரமான சேவையை நிறைவுசெய்திருத்தல்.

03. **நேர்முகப் பரீட்சைக்கான புள்ளி வழங்கல்.-**

| | |
|---|---|
| உரிய மேலதிக அனுபவங்கள் | 30 புள்ளிகள் |
| உரிய மேலதிக தகைமை | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் மற்றும் செயல் முன்னேற்றங்கள் | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையில் வெளிபடுத்தும் திறன்கள் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

04. **சம்பள அளவுத்திட்டம்** : JM1-1 : ரூபா (42,600-10×755-18×1,135-ரூபா 70,580)

(02) **பதவி : உதவி பதிவாளர் (பதவி 01)**

01. **வயதெல்லை** : விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியன்று 22 வயதிற்கும் குறையாத 45 வயதிற்கு கூடாதிருத்தல். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை உட்படாது.)

02. **கல்வி தகைமை: வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனிதவள முகாமைத்துவம் /அரச நிருவாகம்/அரச முகாமைத்துவம்/முகாமைத்துவ பட்டம் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்** (கீழே 1 அல்லது 2)

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமையை பெற்றிருத்தல்.
2. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA I) சேவைப்பிரிவில் II ஆம் தரத்திற்கு உற்பட்ட பதவி ஒன்றில் குறைந்த பட்சம் 05 வருடங்கள் திருப்திகரமான சேவையை நிறைவுசெய்திருத்தல்.

03. **நேர்முகப் பரீட்சைக்கான புள்ளி வழங்கல்.-**

| | |
|---|---|
| உரிய மேலதிக அனுபவங்கள் | 30 புள்ளிகள் |
| உரிய மேலதிக தகைமை | 30 புள்ளிகள் |

| | |
|---|---|
| ஏனைய திறன்கள் மற்றும் செயல் முன்னேற்றங்கள் | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையில் வெளிபடுத்தும் திறன்கள் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

04. **சம்பள அளவுத்திட்டம்** : JM1-1 : ரூபா (42,600-10×755-18×1,135-ரூபா 70,580)

03. **கணக்கு உத்தியோகத்தர் - 01 பதவி**

01. **வயதெல்லை** : விண்ணப்பம் பொறுப்பேற்கப்படும் இறுதி திகதியன்று 22 வயதிற்கும் குறையாத 45 வயதிற்கு கூடாதிருத்தல். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை உட்படாது.)

02. **கல்வி தகைமை: வெளிவாரி விண்ணப்பதாரிகள்** (கீழே 1 அல்லது 2)

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீடு/ வணிகம்/ வியாபார முகாமைத்துவம்/முகாமைத்துவ பட்டம் பெற்றிருத்தல்.

ii. பதவிக்குரிய பாடத்துறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டைய தொழில்வாண்மையான நிறுவனம் ஒன்றில் உள்வாரியாக இடைநிலை பரீட்சையில் சித்திப்பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்** (கீழே 1 அல்லது 2)

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தமையை பெற்றிருத்தல்.
2. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA I) சேவைப்பிரிவில் II ஆம் தரத்திற்கு உற்பட்ட பதவி ஒன்றில் குறைந்த பட்சம் 05 வருடங்கள் திருப்திகரமான சேவையை நிறைவுசெய்திருத்தல்.

03. **நேர்முகப் பரீட்சைக்கான புள்ளி வழங்கல்.-**

| | |
|---|---|
| உரிய மேலதிக அனுபவங்கள் | 30 புள்ளிகள் |
| உரிய மேலதிக தகைமை | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் மற்றும் செயல் முன்னேற்றங்கள் | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையில் வெளிபடுத்தும் திறன்கள் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

04. **சம்பள அளவுத்திட்டம்** : JM1-1 : ரூபா (42,600-10×775-18×1,135-ரூபா 70,580)

(04) **பதவி : ஆங்கில போதனாசிரியர்** (பதவி 01)

01. **வயதெல்லை** : விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதி தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.)

**கல்வித் தகைமை** : வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு (கீழேயுள்ள 1 அல்லது 2 அல்லது 3)

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பான இளமாணிப் பட்டம்/ஆங்கிலம் தொடர்பான பட்டம்

அல்லது

02. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமை (NVQ) ஆறாம் (06) தரத்திற்கு குறையாத தரத்திலான ஆங்கில புலமைச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமையினை பெற்ற பின்னர் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை அல்லது நியதி நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது உரிய துறையில் 05 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

03. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமை (NVQ) ஐந்தாம் (05) தரத்திற்கு குறையாத தரத்திலான ஆங்கில புலமைச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமையினை பெற்ற பின்னர் அரசாங்க, அரச கூட்டுத்தாபனம், சபை அல்லது நியதி நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது உரிய துறையில் 10 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

01. மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரிய தகைமையை பூர்த்திசெய்திருத்தல்

02. **நேர்காணலில் புள்ளிகள் வழங்கும் முறை :**

| | |
|---|---|
| உரிய மேலதிக அனுபவம் | 30 புள்ளிகள் |
| உரிய மேலதிக கல்வித் தகைமை | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள்/செயல் முன்னேற்றம் | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையின் செயலாற்றுகை | 25 புள்ளிகள் |
| | ----- |
| மொத்தப் புள்ளிகள் | 100 |

(05) **சம்பள அளவுத் திட்டம்**: MA 4 - ரூபா. (37×970 - 10 × 755 - 15 × 930 - 5 × 1,135- 65,145)

**அனைத்து பதவிகளுக்குமான ஆட்சேர்ப்பு நிபந்தனைகள்**

1. அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கை பிரஜைகளாக இருத்தல் வேண்டும்
2. பதவி நிரந்தரமானது
3. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வீதத்திற்கு அமைய ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.
4. மூன்று வருட தகுதிகாண் நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டது.

**குறிப்பு:** இப் பதவிகளுக்கான வெற்றிடங்கள் சீதுவை பிரதான அலுவலகத்தில் மாத்திரம் காணப்படுவதுடன் தெரிவாகும் விண்ணப்பதாரிகள் பிரதான அலுவலகத்தில் கடமையாற்ற வேண்டும்.

**சேவை நிபந்தனை** : 1992 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன சட்டத்தின் கட்டளைகளுக்கும் அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் பிறப்பிக்கப்படும் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு கீழ்படிதல் வேண்டும்.

**இணைத்துக்கொள்ளும் முறை :** நியமண அதிகாரியின் பணிப்பின் பேரில் நேர்காணல் குழுவினால் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் நடாத்தப்படும். அதிக புள்ளிகளை பெற்றவர்களுள் திறமை அடிப்படையில் தெரிவு நடைபெறும்

விண்ணப்பதாரியின் முழுமையான தகவல்களை உள்ளடக்கி விண்ணப்பங்கள் கீழே குறிப்பிட்ட முகவரிக்கு 2024.03.15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட வேண்டும். முழுமையற்ற, தெளிவற்ற அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அரசாங்கத் துறையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள /நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

கலாநிதி. ரவீந்திர விதானச்சி,
பணிப்பாளர் நாயகம் (ப.க)

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.
பணிப்பாளர் நாயகம் (ப.க.),
தேசிய சமூக அபிவருத்தி நிறுவனம்,
லியனகேமுல்லை, சீதுவை,
2024.02.29.
03-149

---

**சனாதிபதி அலுவலகம்**

**கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொருளாதார வசதியற்ற தரம் 1 முதல் தரம் 11 வரை கல்வி கற்கும் மாணவ மாணவிகளுக்காக சனாதிபதி நிதியம் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் - 2024/2025**

நாட்டின் அனைத்துப் பாடசாலைகளையும் உள்ளடக்கும் வகையில் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் திறமைகளை வெளிப்படுத்தும் மாணவ மாணவிகளுக்காக மாண்புமிகு சனாதிபதியவர்களின் எண்ணக்கருவுக்கேற்ப புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை கல்வி அமைச்சுடன் இணைந்து சனாதிபதி நிதியம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டம், நாட்டில் தற்போதுள்ள 10,126 (2022 ஆம் ஆண்டு புள்ளிவிபர மதிப்பீட்டு அறிக்கைக்கு அமைய – கல்வி அமைச்சு) அரசாங்க பாடசாலைகளை உள்ளடக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன் இதன் கீழ் பாடசாலை ஒன்றிற்கு வழங்கக்கூடிய ஆகக்கூடிய புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை (ஒவ்வொரு பாடசாலையினதும் மாணவர் எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு) பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பாடசாலை அதிபர்களினால் தமது பாடசாலைகளுக்குரிய புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையினைத் தீர்மானித்து புலமைப்பரிசில் பெறுபவர்கள் தெரிவுசெய்யப்படுவர். இதற்கு தகைமை பெறும் புலமைப்பரிசில் பெறுநர்களுக்கு வருடம் முழுவதும் மாதமொன்றுக்கு நிற்கு 3,000.00 ரூபா வீதம் ஆகக்கூடியது 12 மாதங்களுக்கு அந்த புலமைப்பரிசில் பணம் வழங்கப்படும். இவை தொடர்பான மேலதிக விபரங்களை சனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ Facebook பக்கமான www.facebook.com/president.fund மற்றும் சனாதிபதி நிதியத்தின் www.presidentsfund.gov.lk மற்றும் கல்வி அமைச்சின் www.moe.gov.lk ஆகிய இணையத்தளங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

அதற்குரிய அறிவுறுத்தல் பத்திரம் மற்றும் விண்ணப்பப்படிவம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**அறிவுறுத்தல் பத்திரம் சனாதிபதியின் செயலாளர்**

**தகைமைகள்**

- தரம் 01 தொடக்கம் தரம் 05 வரையுள்ள விருப்ப கல்வி அடைவு மட்டம் 50% அல்லது அதற்கு கூடிய மாணவன் மாணவியாக இருத்தல்.

  தரம் 06 தொடக்கம் தரம் 11 வரை கல்வி கற்கும் தரங்களிலுள்ள, 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதி தவணைப் பரீட்சைக்கேற்ப வகுப்பில் 1-20 வரையான நிலைகளைப் பெற்ற மாணவனாக / மாணவியாக இருத்தல்.

  **கவனிக்க:-** 2024 ஆம் ஆண்டு 1 ஆம் தரத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள மாணவ/மாணவிகள் மற்றும் 2024 ஆண்டு நடைபெறவுள்ள 2023 க.பொ.த.(சா.த.) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவ/மாணவிகள் இதற்கு விண்ணப்பிக்க முடியாது.
- அரசாங்க பாடசாலையொன்றில் கல்வி பயிலும் மாணவன்/மாணவியாக இருத்தல்.
- விண்ணப்பதாரரின் குடும்ப மாதாந்த வருமானம் 100,000.00 ரூபாவிற்கு மேற்படாதிருத்தல்.

**விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்தல் மற்றும் ஒப்படைத்தல்**

- விண்ணப்பத்தின் இலக்கம் I ஆம் பகுதி மற்றும் II ஆம் பகுதிகளின் இலக்கம் 01 தொடக்கம் 05 வரையான பகுதிவுக்குள் மாணவன்/மாணவியால் பூர்த்திசெய்யப்படல் வேண்டும் என்பதுடன் புள்ளி வழங்குதலும் மாணவ/மாணவியால் மேற்கொள்ளப்படல் வேண்டும். உரிய புள்ளிகள் பாடசாலையின் தெரிவுக்குழு மூலம் பரீட்சிக்கப்பட்டு உறுதி செய்யப்படல் வேண்டும்.

  **கவனிக்க:- தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புகளில் உள்ள மாணவன்/மாணவியரின் விருப்ப கல்வி அடைவு மட்டத்தின் பிரகாரம் வகுப்பாசிரியர்/வகுப்பாசிரியையினால் சரியான புள்ளி வழங்கலை மேற்கொள்ளல் வேண்டும்.**
- அனைத்து சந்தர்ப்பங்களிலும் சரியான தகவல்களையே உள்ளடக்குதல் வேண்டும்.
- குறுந் தகவல்களை அனுப்ப முடியுமான தொலைபேசி இலக்கம் ஒன்றைக் குறிப்பிடுதல் வேண்டும். உங்களிடம் அவ்வாறான தொலைபேசி இலக்கம் இல்லையாயின், குடும்பத்தின் நெருங்கிய உறவினர் ஒருவரின் / பாடசாலை ஆசிரியர் ஒருவரின்/ அதிபர் அவர்களின் தொலைபேசி இலக்கம் ஒன்றை அவர்களின் இணக்கப்பாட்டுடன் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.
- குடும்பத்தின் வருமான நிலைமை தொடர்பாக தாம் வசிக்கும் பிரதேசத்தின் கிராம அலுவலரின் சான்றுரை, பிரதேச செயலாளரின் பரிந்துரையுடன் (வருமானச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளத் தேவையில்லை) **பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை தனது பாடசாலை அதிபரிடம் மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.**

அதிபரால் தமது பாடசாலைக்கு ஆகக்கூடிய புலமைப்பரிசில் பெறுநர்கள் எண்ணிக்கை தெரிவுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் அந்த புலமைப்பரிசில் பெறுநரின் தாய்/தந்தை/பாதுகாவலருடன் கூட்டிணைந்த மாதாந்த புலமைப்பரிசிலை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் (விசேட இணைந்த கணக்கு) நடைமுறையிலுள்ள கணக்கு ஒன்றை மக்கள் வங்கி அல்லது இலங்கை வங்கி கிளையில் திறந்து, அக்கணக்கு விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள பக்கம் மற்றும் தாய்/தந்தை/பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டையின் தெளிவான நிழற்படப் பிரதியை அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த நிழற்படப் பிரதிகள் அதிபரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

**கவனிக்க:-** எவ்வாறாயினும் அதிபரால் புலமைப்பரிசில் பெறுநர் ஒருவராக தெரிவு செய்யப்படதாக அறிவிக்கப்படும் வரை இணைந்த கணக்கு ஒன்றை திறக்கத் தேவையில்லை.

- **எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விண்ணப்பங்கள் சனாதிபதி அலுவலகத்தில் அல்லது சனாதிபதி நிதியத்தில் நேரடியாக ஒப்படைத்தல் அல்லது தபால் மூலம் அனுப்புதல் ஆகாது.**

1. **புள்ளி வழங்கும் முறை - அனைத்து தரங்களுக்கும்**

குடும்பம் பற்றிய தகவல்கள்

1. பெற்றோரில் தங்கி வாழும் 21 வயதுக்கு குறைந்த குடும்பத்தில் உள்ள சகோதர சகோதரிகள் எண்ணிக்கை மற்றும் பெற்றோர் பற்றிய விபரம்

புள்ளி

| | | | |
|---|---|---|---|
| 1.1 | மாணவன்/மாணவியுடன் இரண்டு சகோதர சகோதரிகள் இருப்பின் | - | 03 |
| 1.2 | மாணவன்/மாணவியுடன் மூன்று சகோதர சகோதரிகள் இருப்பின் | - | 04 |
| 1.3 | மாணவன்/ மாணவியுடன் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட சகோதர சகோதரிகள் இருப்பின் | - | 05 |
| 1.4 | மாணவன்/மாணவி பெற்றோர் இருவரினதும் பாதுகாப்பை இழந்திருத்தல் | - | 10 |
| 1.5 | பெற்றோர்களில் ஒருவரது பாதுகாப்பை இழந்திருத்தல் | - | 05 |
| 1.6 | மாணவன்/ மாணவி முழுஅளவில் உடல் ரீதியான குறைபாடுடையவர் எனின் (பகுதியளவில் குறைபாடுடையவர் எனின் 05 புள்ளிகள் மாத்திரம் வழங்கவும்) | - | 10 |

(ஆகக்கூடிய புள்ளிகள் 25 )

**கவனிக்க:-** மேலே 1.4 இல் பெற்றோர் இருவரது பாதுகாப்பையும் இழந்திருப்பின் ஆகக்கூடியது 10 புள்ளிகள் வழங்கப்படுவதுடன், 1.5 இல் பெற்றோர் இருவருள் ஒருவரது பாதுகாப்பை இழந்திருப்பின் 05 புள்ளிகள் மாத்திரம் வழங்கப்படும்.

பெற்றோரில் தங்கிவாழும் 21 வயதிற்குற்பட்ட திருமணமாகாதவர்கள், சகோதர சகோதரிகளாக கருதப்படுகிறார்கள். உடல் குறைபாடுகள் முழுமையான குறைபாடா அல்லது பகுதியளவிலான உடல் குறைபாடுகளா என்பது தொடர்பில் அரச மருத்துவ உத்தியோகத்தர் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

**2. மாணவ/மாணவிகளின் செயற்திறன் அடைவு**

*2.1. தரம் 1 முதல் தரம் 5 வரையான தரங்களிலுள்ள மாணவ/மாணவிகளுக்கு மாத்திரம்.*

2.1.1. தரம் 1 முதல் தரம் 5 வரையான தரங்களில் கல்வி கற்கும் மாணவ/மாணவிகள் பெற்றுக்கொண்ட விருப்ப கல்வி அடைவு மட்டம்

| அடைவு மட்டம் | புள்ளிகள் |
|---|---|
| 100% | 50 புள்ளி |
| 75% | 40 புள்ளி |
| 50% | 30 புள்ளி |
| (ஆகக் கூடிய புள்ளி 50) | |

2.1.2 **இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

பாடசாலை மட்டத்திலான மெய்வல்லுநர் விளையாட்டு/ செஸ்/ நீச்சல்/ ஜிம்னாஸ்டிக்/ கராத்தே/ சுற்றாடல் படையணி/இசைக்கருவி இசைத்தல்/பாடல்/ஓவியம்/ நடனம்/ சாரணர்/ சிறிய நண்பி (குடா மிதுரி) மற்றும் வேறு அனுமதிக்கப்பட்ட இணைப்பாட விதான செயற்பாடுகள்.

| இடம் | பாடசாலை மட்டம் |
|---|---|
| முதலாமிடம் | 08 புள்ளி |
| இரண்டாமிடம் | 07 புள்ளி |
| மூன்றாமிடம் | 06 புள்ளி |

(ஆகக் கூடிய புள்ளிகள் 08)

**கவனிக்க:- மேற்குறிப்பிட்ட 2.1.2 இல், ஒரு மாணவனுக்கு/ மாணவிக்கு இணைப்பாட விதான செயற்பாடுகளுக்காக புள்ளிகள் வழங்கும் போது கூட்டு செயற்பாடுகளுக்காகவும் புள்ளிகள் வழங்கப்படும்.**

*2.2. தரம் 6 முதல் தரம் 11 வரையான மாணவ/மாணவிகளுக்கு மாத்திரம்.*

2.2.1. மாணவன் மாணவி 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதி தவணைப் பரீட்சையில் பெற்ற நிலை

| | |
|---|---|
| 01 ஆம் நிலை முதல் 03 ஆம் நிலை வரை | 50 புள்ளி |
| 04 ஆம் நிலை முதல் 06 ஆம் நிலை வரை | 45 புள்ளி |
| 07 ஆம் நிலை முதல் 10 ஆம் நிலை வரை | 40 புள்ளி |
| 11 ஆம் நிலை முதல் 15 ஆம் நிலை வரை | 35 புள்ளி |
| 16 ஆம் நிலை முதல் 20 ஆம் நிலை வரை | 30 புள்ளி |
| (ஆகக் கூடிய புள்ளிகள் 50) | |

2.2.2. **இணைப்பாடவிதான செயற்பாடுகள்(விளையாட்டு/அழகியல் மற்றும் ஏனையவை)**

பாடசாலை மட்டத்தில் நடைபெறும் தனி/குழு விளையாட்டுகள் மற்றும் மெய்வல்லுநர் போட்டி, இணைப்பாடவிதான செயற்பாடுகள் (சங்கங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய) போன்றவை மூலம் பெற்ற வெற்றிகள்

| | பாடசாலை மட்டம் | வலய மட்டம் | மாகாண மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|---|
| முதலாமிடம் | 05 | 06 | 07 | 08 |
| இரண்டாமிடம் | 04 | 05 | 06 | 07 |
| மூன்றாமிடம் | 03 | 04 | 05 | 06 |

(ஆகக் கூடிய புள்ளிகள் 08)

**கவனிக்க:-**

- ஒரு வருடத்திற்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படுவதன் அடிப்படையில், அண்மித்த 03 வருடங்களை கவனத்திற் கொள்ளுதல் பொருத்தமாகும்.
- மேற்குறிப்பிட்ட 2.2.2.இல்,ஒரு மாணவனுக்கு/மாணவிக்கு ஒரே இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு தேசிய, மாகாண, வலய மற்றும் பாடசாலை ஆகிய மூன்று மட்டங்களில் தொடர்ந்து 03 வருடங்களிலும் வெற்றி பெற்றிருந்தால் புள்ளிகள் வழங்கும் போது ஆகக்கூடிய புள்ளி மட்டத்தினையே கவனத்திற் கொள்ள வேண்டும்.

03. **மாணவர் தலைமைத்துவம் - அனைத்து தரங்களிற்கும்**

பாடசாலையின் தலைமை மாணவர் தலைவர்/ உப மாணவர் தலைவர் - 07 புள்ளிகள்
மாணவர் மாணவர் (கனிஷ்ட/ சிரேஷ்ட) - 06 புள்ளிகள்
வகுப்புத் தலைவர் - 05 புள்ளிகள்
(ஆகக்கூடிய புள்ளிகள் 07)

**கவனிக்க:-** மேலே 03 இல் புள்ளி வழங்கும் போது ஆகக் கூடிய மட்டம் மாத்திரம் கவனத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

04. விண்ணப்பதாரி அறநெறிப் பாடசாலைக் கல்வி கற்றல். - அனைத்து தரங்களிற்கும் (அறநெறி பாடசாலையின் தலைமை ஆசிரியரால் வழங்கப்பட்ட அத்தாட்சிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)

| | |
|---|---|
| அறநெறிப் பாடசாலைக் கல்வி கற்றல் | 10 புள்ளிகள் |

(ஆகக்கூடிய புள்ளிகள் 10)

(ஒரு வருடத்திற்கும் மேலாக அறநெறிக் கல்வியினை பெறுதல் மற்றும் தற்போதும் அறநெறி பாடசாலையின் மாணவன்/மாணவியாக இருத்தல்.)
அனைத்து பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளும் இதில் உள்ளடங்கும்.

உங்களுக்கு இது தொடர்பான மேலதிக தகவல்கள் தேவைப்பட்டால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சலுக்கு (Email) செய்தி ஒன்றை அனுப்பி அல்லது கீழே குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.
மின்னஞ்சல் **(Email) :-** pfschol@presidentsoffice.lk
011 -2 354 354 – உள் இணைப்பு இலக்கம் :- 4830/ 4835/ 4837
074 - 085 4527 (WhatsApp மூலம் அனுப்பப்படும் குறுஞ்செய்திகள் மாத்திரம்)

அலுவலக உபயோகத்துக்காக:-

**கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொருளாதார வசதியற்ற தரம் 1 முதல் தரம் 11 வரை கல்வி கற்கும் மாணவ மாணவிகளுக்காக சனாதிபதி நிதியம் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் - 2024/2025**

(தயவுசெய்து விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்வதற்கு முன்னர் அறிவுறுத்தல் பத்திரத்தைப் பார்க்கவும்)

மாகாணம் : ............................... மாவட்டம் :........................ கல்வி வலயம் :..............................

## பகுதி I

01. **விண்ணப்பதாரியின் தனிப்பட்ட தகவல்கள் :**

1.1 மாணவன்/மாணவியின் முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :..........................................
1.2 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (தமிழில்) : ..........................................
1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : ..........................................
1.4 கல்வி கற்கும் பாடசாலையின் பெயர்: ..........................................
1.5 கல்வி கற்கும் தரம் : ..........................................
1.6 பிறந்த திகதி : ☐☐☐☐ ☐☐ ☐☐ (YYYY-MM-DD)
1.7 தாய்/தந்தை/பாதுகாவலரின் பெயர் :..........................................
1.8 தாய்/தந்தை/பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
1.9 தொலைபேசி இலக்கம் (குறுந்தகவல் அனுப்ப முடியுமான) : 0 7 ☐☐☐☐☐☐☐☐
1.10 தொலைபேசி இலக்கம் (தொடர்புகொள்ள முடியுமான) : ☐☐☐☐☐☐☐☐☐☐
1.11 தனிப்பட்ட முகவரி (தமிழ்) : ..........................................
..........................................
1.12 தனிப்பட்ட முகவரி (ஆங்கிலம்) : ..........................................
..........................................

## பகுதி II

### குடும்பம் பற்றிய தகவல்கள் - சகல தரங்களுக்குமான

01. பெற்றோரில் தங்கி வாழும் 21 வயதுக்கு குறைந்த குடும்பத்தில் உள்ள சகோதர சகோதரிகள் எண்ணிக்கை மற்றும் பெற்றோர் பற்றிய விபரம்

| | | புள்ளி |
|---|---|---|
| 1.1 | மாணவன்/மாணவி உள்ளிட்ட சகோதர சகோதரிகள் எண்ணிக்கை இரண்டு பேராக இருப்பின் | |
| 1.2 | மாணவன்/மாணவி உள்ளிட்ட சகோதர சகோதரிகள் எண்ணிக்கை மூன்று பேராக இருப்பின் | |
| 1.3 | மாணவன்/மாணவி உள்ளிட்ட சகோதர சகோதரிகள் எண்ணிக்கை நான்கு பேர் அல்லது அதற்கு அதிகமாக இருப்பின் | |
| 1.4 | நீங்கள் உங்களது பெற்றோர்கள் இருவரினதும் பாதுகாப்பில் உள்ளீர்களா? ஆம்/இல்லை | |
| 1.5 | நீங்கள் உங்களது தாய் அல்லது தந்தை ஆகிய இருவருள் ஒருவரது பாதுகாப்பில் மாத்திரம் உள்ளீர்களா? ................ மாத்திரம் உள்ளார். | |
| 1.6 | நீங்கள் உடல் ரீதியான குறைபாட்டுக்கு ஆளாகியுள்ளீர்களா? ஆம்/இல்லை அம் எனில் அந்த உடல் ரீதியான குறைபாடுகள் யாது? | |

பெற்ற மொத்த புள்ளிகள்
(ஆகக்கூடிய புள்ளிகள் 25 ஆகும்)

02. மாணவ மாணவிகளின் செயற்திறன் அடைவு

2.1 **தரம் 1 முதல் தரம் 5 வரையான தரங்களிலுள்ள மாணவ மாணவிகளுக்கு மாத்திரம்**
தரம் 1 முதல் தரம் 5 வரை கல்வி கற்கும் மாணவ மாணவிகள் பெற்றுக்கொண்ட விருப்ப கல்வி அடைவு மட்டம்

| பெற்றுக்கொண்ட அடைவு மட்டம் | புள்ளிகள் |
|---|---|
| 100% | |
| 75% | |
| 50% | |
| (ஆகக் கூடிய புள்ளிகள் 50) | |

2.1.2 பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் மெய்வல்லுநர் விளையாட்டு/செஸ்/நீச்சல்/ ஜிம்னாஸ்டிக்/ கராத்தே/ சுற்றாடல் படையணி /இசைக்கருவி இசைத்தல்/ பாட்டு/ ஓவியம்/நடனம்/ சாரணர் / சிறிய நண்பி (குடா மிதுரி) மற்றும் ஏனைய அனுமதிக்கப்பட்ட இணைப்பாடவிதான செயற்பாடுகள்

| இணைப்பாடவிதான செயற்பாடுகள் | பாடசாலை மட்டம் | | |
|---|---|---|---|
| | 1 ஆம் இடம் | 2 ஆம் இடம் | 3 ஆம் இடம் |
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| | | மொத்தம் | |

(ஆகக்கூடிய புள்ளிகள் 08)

2.2 **தரம் 6 முதல் தரம் 11 வரையான மாணவ மாணவிகளுக்கு மாத்திரம்**

2.2.1 மாணவன்/மாணவி 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதித் தவணைப் பரீட்சையில் பெற்ற நிலை

| இடம் | விண்ணப்பதாரி பெற்ற இடம் | புள்ளி |
|---|---|---|
| 01 ஆம் நிலை முதல் 03 ஆம் நிலை வரை | | |
| 04 ஆம் நிலை முதல் 06 ஆம் நிலை வரை | | |
| 07 ஆம் நிலை முதல் 10 ஆம் நிலை வரை | | |
| 11 ஆம் நிலை முதல் 15 ஆம் நிலை வரை | | |
| 16 ஆம் நிலை முதல் 20 ஆம் நிலை வரை | | |
| | பெற்ற மொத்த புள்ளிகள் (ஆகக்கூடிய புள்ளிகள் 50 ஆகும்) | |

2.2.2 இணைப்பாடவிதான செயற்பாடுகள் (விளையாட்டு/அழகியற்கலை மற்றும் ஏனையவை)
பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் ஒற்றையர் /குழு ரீதியான விளையாட்டு மற்றும் மெய்வல்லுநர் விளையாட்டு, இணைப்பாடவிதான செயற்பாடுகள் (சங்கங்கள் போன்றன உள்ளிட்ட) மூலம் பெற்றுள்ள வெற்றிகள்

| விளையாட்டு, அழகியற்கலை மற்றும் ஏனையவை விளையாட்டு, அழகியற்கலை மற்றும் ஏனையவை | பாடசாலை மட்டத்தில் (ஆகக்கூடிய புள்ளிகள 05) | | வலய மட்டத்தில் (ஆகக்கூடிய புள்ளிகள் 06) | | மாகாண மட்டத்தில் (ஆகக்கூடிய புள்ளிகள் 07) | | தேசிய மட்டத்தில் (ஆகக்கூடிய புள்ளிகள் 08) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 ஆம் இடம் | 2 ஆம் அல்லது 3 ஆம் இடம் | 1 ஆம் இடம் | 2 ஆம் அல்லது 3 ஆம் இடம் | 1 ஆம் இடம் | 2 ஆம் அல்லது 3 ஆம் இடம் | 1 ஆம் இடம் | 2 ஆம் அல்லது 3 ஆம் இடம் |
| 1 | | | | | | | | |
| 2 | | | | | | | | |
| 3 | | | | | | | | |

பெற்ற மொத்த புள்ளிகள்
(ஆகக்கூடிய புள்ளிகள் 08 ஆகும்)

03. **மாணவர் தலைமைத்துவம் - அனைத்து தரங்களுக்காகவும்**

| | | புள்ளி |
|---|---|---|
| 01 | பாடசாலையின் தலைமை மாணவர் தலைவர்/ பாடசாலையின் உப மாணவர் தலைவர் | |
| 02 | மாணவர் தலைவர் (கனிஷ்ட/சிரேஷ்ட) | |
| 03 | வகுப்புத் தலைவர் | |
| | பெற்ற மொத்த புள்ளிகள் ( ஆகக்கூடிய புள்ளிகள் 07 ஆகும்) | |

04. **மாணவன்/மாணவி அறநெறிப் பாடசாலைக் கல்வி கற்றல். அனைத்து தரங்களுக்காகவும் (அறநெறிப் பாடசாலை அதிபரால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்துவதற்கான ஆவணம் சமர்ப்பித்தல் வேண்டும்)**

| | | புள்ளி |
|---|---|---|
| 01 | அறநெறிப் பாடசாலைக் கல்வி கற்றல் | |
| | ( ஆகக்கூடிய புள்ளிகள் 10 ஆகும்) | |

05. **புள்ளிகளின் சாராம்சம்**

| | | |
|---|---|---|
| 01 | குடும்பம் பற்றிய தகவல்கள் | |
| 02 | **மாணவ /மாணவியரின் செயற்திறன்** | |
| | **தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை**<br>• விருப்ப கல்வி அடைவு மட்டம்<br>• இணைப்பாடவிதான செயற்பாடுகள் | |
| | **தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை**<br>• இறுதி தவணைப் பரீட்சையில் பெற்ற நிலை<br>• இணைப்பாடவிதான செயற்பாடுகள் | |
| 03 | மாணவர் தலைமைத்துவம் | |
| 04 | விண்ணப்பதாரி அறநெறிப் பாடசாலைக் கல்வி கற்றல் | |

**பெற்ற மொத்த புள்ளிகள்** ☐

மேலே காட்டப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானதும் சரியானதுமென உறுதிசெய்கின்றேன். தேவையான போது ஏற்புடைய சான்றிதழ்களின் மூலப்பிரதியை சமர்ப்பிப்பதற்கு நான் இணங்குகின்றேன்.

திகதி : ........................ ........................ ...............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம் தாய்/தந்தை/பாதுகாவலரின் பெயரும் கையொப்பமும்

விண்ணப்பதாரியால் குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானதென உறுதிசெய்கிறேன்.

திகதி : ........................ ...............................................
வகுப்பாசிரியர்/வகுப்பாசிரியையின் பெயரும் கையொப்பமும்

**குடும்பத்தின் மாதாந்த வருமானம் பற்றிய கூற்று :-**
**(தாய்/தந்தை/பாதுகாவலரால் பூர்த்திசெய்யப்படல் வேண்டும்)**

நான் .......................................................... தொழில் புரிகின்றேன்./தொழில் புரியவில்லை.
(தொழிலைக் குறிப்பிடவும்)
எனது கணவர்/மனைவி .......................................... நிறுவனத்தில் தொழில் புரிகின்றார்./ தொழில் புரியவில்லை. எமது குடும்பத்தின் மாதாந்த வருமானம் ரூ: ................................ என வெளிப்படுத்துகின்றேன்.

..........................................
தாய்/தந்தை/பாதுகாவலரின் கையொப்பம்
திகதி : ..................... பெயர் : ....................................

மேலே குறிப்பிடப்பட்ட வருமானம் பற்றிய விடயங்கள் உண்மையானதென உறுதிசெய்கின்றேன்.

....................................
கிராம அலுவலரின் கையொப்பம்
திகதி : ...................... (பதவி முத்திரை)

மேற்குறித்த வருமானம் பற்றிய விடயங்கள் சரியானதென பரிந்துரை செய்கிறேன்.

....................................
பிரதேச செயலாளர்
திகதி : ...................... (பதவி முத்திரை)

பாடசாலைத் தெரிவுக்குழு உறுப்பினர்களின் விபரங்கள் மற்றும் பரிந்துரை:-

| | பெயர் | பதவி | கையொப்பம் | பரிந்துரை செய்கிறேன் / பரிந்துரை செய்யவில்லை |
|---|---|---|---|---|
| 1. | ........................ | ........................ | ........................ | ........................ |
| 2. | ........................ | ........................ | ........................ | ........................ |
| 3. | ........................ | ........................ | ........................ | ........................ |

**வலயக் கல்விப் பணிப்பாளர்,**

மேலே 1-5 வரை குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் பாடசாலைத் தெரிவுக்குழு மூலம் பரீட்சிக்கப்பட்டதாகவும், ஏனைய தனிப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதுமெனவும் உறுதிசெய்கிறேன். ஆகவே .............................. .................................. மாணவன்/மாணவியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை வலயத்தின் தெரிவுக்குழுவிற்கு பரிந்துரை செய்து சமர்ப்பிக்கின்றேன்.

அவ்வாறே புலமைப்பரிசில் பெறுநரின் தாய்/தந்தை/பாதுகாவலருடன் கூட்டிணைந்த மாதாந்த புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் (விசேட இணைந்த கணக்கு) நடைமுறையிலுள்ள கணக்கு மற்றும் தாய்/தந்தை/பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதி இதனோடு இணைக்கப்பட்டுள்ளது.

....................................
அதிபரின் கையொப்பம்
திகதி : ...................... (பதவி முத்திரை)

**வலயக் கல்வி அலுவலகத்தின் உபயோகத்திற்காக**

வலயத்தின் தெரிவுக்குழு உறுப்பினர்களின் விபரம்

| | பெயர் | பதவி | கையொப்பம் |
|---|---|---|---|
| 1. | ........................ | ........................ | ........................ |
| 2. | ........................ | ........................ | ........................ |
| 3. | ........................ | ........................ | ........................ |

03-151